Let the mind manage the body
Que l'esprit gère le corps

**Index Number:** ..........................................................................

# NATIONAL CERTIFICATE OF EDUCATION

March / April 2021

## TAMIL (N620)

**TIME: 2 HOURS 15 MINUTES**

Candidates answer on the Question Paper.

---

**INSTRUCTIONS TO CANDIDATES**

1. Write your index number in the space provided above.
2. Write in dark blue or black ink.
3. Any rough working should be done in this booklet.
4. Answer **ALL** questions.
5. This document consists of **10** questions printed on **15** pages.
6. The number of marks is given in brackets [ ] at the end of each question or part question.
7. The total of the marks for this paper is **100**.

| For Examiners' use | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Question No.** | **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** | **Total** | **Signature** |
| **Marker** | | | | | | | | | | | | |
| **Team Leader** | | | | | | | | | | | | |
| **Quality Controller** | | | | | | | | | | | | |
| **CE/ACE** | | | | | | | | | | | | |

© Mauritius Examinations Syndicate

Marks

## Question 1 (15 marks)

**சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. நேற்று சிற்றப்பா ஊருக்குத் .......................... .

அ. திரும்புகிறார் இ. திரும்புவார்

ஆ. திரும்பினார் ஈ. திரும்பினாள்

உ. என் அம்மா ஓய்வாக இருக்கிறார். .......................... பேரங்காடிக்குப் போகிறார்.

அ. அவர் இ. அது

ஆ. அவன் ஈ. நீ

ங. இப்பொழுது அமுதா .......................... போகிறாள்?

அ. என்ன இ. எது

ஆ. எந்த ஈ. எங்கே

ச. நானும் .......................... வெளிநாட்டுக்குப் போவோம்.

அ. அகிலன் இ. அகிலனுக்கு

ஆ. அகிலனும் ஈ. அகிலனின்

ரு. அக்கா .......................... பால் போடவில்லை.

அ. தேநீரில் இ. தேநீரை

ஆ. தேநீர் ஈ. தேநீரால்

சூ. ஆசிரியர் .......................... பாடங்கள் மாணவர்கள் எழுதுகிறார்கள்.

அ. விளக்கு இ. விளக்கி

ஆ. விளக்கினார் ஈ. விளக்கிய

எ. .......................... இந்தப் படிக்கட்டுகளில் ஏற முடிந்தது.

அ. கிழவி இ. கிழவியால்

ஆ. கிழவிக்கு ஈ. கிழவியை

Marks

அ. நான் கடையில் ......................... இரண்டு ரொட்டிகளை வாங்கினேன்.

அ. நுழைந்து இ. நுழைய

ஆ. நுழை ஈ. நுழைந்தான்

கூ. அது ஓர் ......................... கட்டுரை.

அ. அழகான இ. அழகானது

ஆ. அழகாக ஈ. அழகானவை

க0. அத்தை மாங்காயைப் பறித்தார். ......................... அவர் ஊறுகாய் செய்தார்.

அ. ஆனாலும் இ. ஏனென்றால்

ஆ. ஆனால் ஈ. போது

கக. கோடுள்ள சொற்களை **ஒருமையில்** எழுது.

அந்தக் காட்டில் உள்ள <u>மரங்கள்</u> <u>காய்ந்துவிட்டன</u>.

...............................................................................

கஉ. **பிரித்து** எழுது.

கல்லை = ................. + .................

கங. **(!)** அல்லது **(?)** தேர்ந்தெடுத்து எழுது.

நீ ஏன் விழாவில் கலந்துகொண்டாய்

...............................................................................

கச. பின்வரும் சொற்றொடர்களை **இணைத்து** எழுது.

அண்ணன் வீட்டுக்கு வந்தார். அவர் குளித்தார். (உடனே)

...............................................................................

கரு. கீழ்க்காணும் சொற்றொடரை **உடன்பாட்டில்** எழுது.

நாளைக்கு அவர்கள் சுற்றுலாவுக்குச் செல்ல மாட்டார்கள்.

...............................................................................

Marks

## Question 2 (5 marks)

**சரியான விடையின் எழுத்தை வட்டமிடு.**

க. என்னால் எதுவும் வாங்க முடியவில்லை. என் …………… வீட்டில் மறந்துவிட்டேன்.

அ. செருப்பு இ. குவளை

ஆ. பணம் ஈ. சாப்பாடு

உ. என் தந்தையுடைய வண்டி அழுக்காக இருக்கிறது. அவர் வண்டியைக் …………… வேண்டும்.

அ. பார்க்க இ. கழுவ

ஆ. விற்க ஈ. திறக்க

ங. வள்ளி ஓர் …………… பெண். அவள் வகுப்பில் ஒரு போதும் பேச மாட்டாள்.

அ. அமைதியான இ. அழகான

ஆ. உயரமான ஈ. கோபமான

ச. என் அம்மாவுக்கு ஒரே…………… . ஏனென்றால் என் அண்ணன் மருத்துவமனையில் இருந்தார்.

அ. வெட்கம் இ. பெருமை

ஆ. மகிழ்ச்சி ஈ. கவலை

ரு. "நீ உன் வீட்டுவேலையை ஏன் செய்யவில்லை?" என்று ஆசிரியர் …………… .

அ. கூப்பிட்டார் இ. கேட்டார்

ஆ. சிரித்தார் ஈ. தெரிவித்தார்

Marks

**Question 3A (5 marks)**

**(அ). கீழ்க்காணும் கடிதத்தைக் கவனமாகப் படி.**

அன்புள்ள அமுதா,

வணக்கம். என் பிறந்த நாளை முன்னிட்டு நானும் என் பெற்றோரும் அடுத்த வெள்ளிக்கிழமை ஒரு சுற்றுலாவுக்குப் போவோம். நாங்கள் பத்து மணிக்குச் 'சமாரெல்' என்னும் இடத்துக்குப் புறப்படுவோம்.

அதற்குப் பிறகு நாங்கள் 'புளூபே' கடற்கரைக்குப் போவோம். நாங்கள் அங்கே பகல் உணவைச் சாப்பிடுவோம். அன்றைக்கு என் அம்மா எனக்குப் பிடித்த கோழிக் கறியைச் சமைப்பார் என்று அவர் வாக்கு அளித்தார்.

நாங்கள் மாலையில் ஆறு மணி அளவில் வீட்டுக்குத் திரும்பி வருவோம்.

**நீயும் எங்களோடு வந்தால் நான் பெரு மகிழ்ச்சி அடைவேன்!**

இப்படிக்கு,
உன் தோழி,
குழலி.

**<u>பின்வரும் தகவல் தாளை நிரப்பு:</u>**

| | | |
|---|---|---|
| **கடிதத்தை எழுதியவள்** | : | ……………**குழலி**…………………… |
| சுற்றுலா நாள் | : | ……………………………………… |
| **முதலில்** அவர்கள் போகும் இடம் | : | ……………………………………… |
| பகல் உணவைச் சாப்பிடும் இடம் | : | ……………………………………… |
| குழலிக்குப் பிடித்த கறி | : | ……………………………………… |
| அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வரும் நேரம் | : | ……………………………………… |




Please turn over this page

**Question 3B (5 marks)**

**(ஆ). கீழ்க்காணும் விளம்பரத்தை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுது.**

**விளையாட்டுத் துறை அமைச்சகம்**
**விளையாட்டுப் போட்டி 2021**

விளையாட்டுத் துறை அமைச்சகம் 2021ஆம் ஆண்டு விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு எல்லா உயர்நிலைப் பள்ளிகளையும் மகிழ்ச்சியுடன் அழைக்கிறது.




**தேதி** : 11ஆம் அக்டோபர் 2021

**இடம்** : ‘சான் டெ மார்சு’

**நேரம்** : காலை ஒன்பது மணி முதல் மாலை நான்கு மணி வரை

**நுழைவுச் சீட்டு** : ஐம்பது ரூபாய் - (பகல் உணவும் ஒரு புட்டித் தண்ணீரும் வழங்கப்படும்.)

**இந்த மகிழ்ச்சியான நாளைக் கழிக்க எங்களோடு கலந்துகொள்ள வாருங்கள்!**

**விளையாட்டுத் துறை அமைச்சகம்**
**இராயல் தெரு, உரோசில்**
**தொலைபேசி எண்: ☎ 4648321**

அ. எந்த நிகழ்ச்சி நடைபெறும்?

..........விளையாட்டுப் போட்டி.......................................................

ஆ. எந்த அமைச்சகம் இந்த நிகழ்ச்சியை நடத்துகிறது?

.............................................................................................

இ. எந்தப் பள்ளி மாணவர்களை இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள அழைக்கிறார்கள்?

.............................................................................................

ஈ. அந்த நிகழ்ச்சி எங்கே நடைபெறும்?

.............................................................................................

உ. அந்த நிகழ்ச்சி எத்தனை மணிக்குத் தொடங்கும்?

.............................................................................................

ஊ. ஒரு நுழைவுச் சீட்டு எத்தனை ரூபாய்?

.............................................................................................

## Question 4 (5 marks)

**வளைக்கோட்டில் உள்ள சொல்லைத் திருத்திக் கோடிட்ட இடத்தில் எழுது. ஓர் எடுத்துக்காட்டு தரப்பட்டுள்ளது.**

விடுமுறைக் காலத்தில் வள்ளி தன் **அம்மாவோடு (அம்மா)** பேரங்காடிக்குச் செல்ல விரும்பினாள். அவர்கள் ……………………… (வீடு) ஒன்பது மணிக்குக் கிளம்பினார்கள். பேரங்காடி அவர்களுடைய வீட்டுக்குப் ……………………… (பக்கம்) இருந்தது. தெருவில் அவர்கள் ……………………… (வேகம்) நடந்து போனார்கள். திடீரென்று வள்ளி தன் வகுப்புத் ……………………… (தோழன்) நளினியைச் சந்தித்தாள். அவர்கள் இருவரும் சிறிது நேரம் ……………………… (பேசு). பிறகு வள்ளியும் அம்மாவும் பேரங்காடியை நோக்கிப் போனார்கள்.

## Question 5 (5 marks)

**கோடிட்ட சொற்களைத் திருத்தி எழுது.**

ஒரு நாள் கந்தன் வழியில் ஒரு நாய்க்குட்டி பார்த்தான். அது மிகவும் சிறியவை.

………………………………**நாய்க்குட்டியைப்**……………………………………

கந்தன் அதைப் பார்த்ததும் அவன் வருந்தினார்கள். அதனால் அவன் அதைத்

…………………………………………………………………………………….

தன் வீட்டுக்குக் கொண்டுபோய் விரும்பினான். ஆனால், அவனுடைய தந்தை

…………………………………………………………………………………….

நாய் பிடிக்காது. அவன் நாய்க்குட்டியை எடுத்துத் தன் நன்பனுடைய வீட்டுக்குக்

…………………………………………………………………………………….

கொண்டுபோனான்.

## Question 6A (5 marks)

**கீழ்வரும் பகுதியைப் படித்துச் சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்துக் கோடிட்ட இடத்தில் எழுது.**

| | | | |
|---|---|---|---|
| **அடைந்தது** | | **மரம்** | **இன்னொரு** |
| **ஆற்றில்** | **திருட** | ~~**பார்த்தது**~~ | **விரைவாக** |

ஒரு நாள் ஒரு நாய் தரையில் கிடந்த ஓர் எலும்பைப் **பார்த்தது** . அதை ………………….. வாயில் கௌவி வீட்டுக்கு ஓடத் தொடங்கியது. வேறு நாய்கள் இந்த எலும்பைத் ………………….. அது விரும்பவில்லை. சிறிது நேரத்துக்குப் பிறகு அது ஒரு பாலத்தை ………………….. . அது பாலத்தைக் கடக்கும்போது ………………….. பார்த்தது. ………………….. நாய் தன்னைப் பார்த்துக்கொண்டிருந்தது என்று அது கவனித்தது. அந்த வேறு நாயின் வாயிலும் ஓர் எலும்பு இருந்தது.

## Question 6B (5 marks)

**கீழ்வரும் பகுதியைப் படித்துக் கோடுள்ள இடத்தில் உங்கள் சொந்த விடையை எழுது.**

முட்டாள் நாய்! அங்கே இன்னொரு நாய் இருக்கவில்லை. ஆனால், அது தண்ணீரில் தனது முகத்தையே பார்த்தது என்று அது ………………….. . வேறு எலும்பையும் கிடைக்க அது தண்ணீரில் ………………….. . இன்னொரு நாய் இல்லை என்று அறிந்தபோது அதற்கு ………………….. ஏற்பட்டது. எலும்பு தனது வாயிலிருந்து கீழே ………………….. . பாவம்! அதற்கு எந்த எலும்பும் கிடைக்கவில்லை. ………………….. வருத்தத்துடன் தண்ணீரிலிருந்து வெளி வந்தது. பேராசை பெரு நட்டம், அல்லவா?

Marks

## Question 7 (10 marks)

**நீ ஒரு கவர்ச்சி மிக்க இடத்தைப் பார்க்கப் போனாய். நீ இதைப் பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதத் தீர்மானிக்கிறாய். கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு 50 – 60 சொற்கள் அளவில் அக்கடிதத்தை எழுது.**

- நீ எந்த இடத்துக்குப் போனாய்?
- அந்த இடத்தில் உங்களை எவை எவை கவர்ந்தன?
- நீ அங்கே என்ன பார்த்தாய்? அங்கே நீ என்ன செய்தாய்?
  இந்த இடம் உனக்குப் பிடித்தது என்று உன் நண்பனுக்கு ஏன் தெரிவிக்க விரும்புகிறாய்?

அன்புள்ள ……………,

…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………
…………………………………………………………………………………………

இப்படிக்கு,
உன் நண்பன்
……………….. .

**Question 8 (15 marks)**

***கீழ்வரும் பகுதியைக் கவனமாகப் படி.***

பாலன், ஒரு பன்னிரண்டு வயதுள்ள பையன். விறகுகளைத் தேடக் காட்டுக்குப் போனான். திடீரென்று அவன் பறைகளின் ஒலிகளைக் கேட்டான். அந்த ஒலி அதிகரித்துக்கொண்டே இருந்தது. அந்தப் பறைகளின் ஓசை ஒரே ஒன்று தெரிவிக்கிறது – ஓர் ஆபத்து இருக்கிறது என்று அவன் அறிந்துகொண்டான். தன்னால் முடிந்த அளவிற்கு அவன் தன் ஊரை நோக்கி மிக வேகமாக ஓடினான். பாலன் ஊருக்குப் பக்கத்தில் வந்ததும், ஊர்மக்கள் தடிகளைக் கையில் வைத்துக் கொண்டு எல்லாத் திசைகளிலும் ஓடுவதைப் பார்த்தான்.

அவன் அப்பா அவனைப் பார்த்து, “பாலா!” என்று அலறினார். “யானைக் கூட்டம் இந்தத் திசையில் வருகிறது. நாங்கள் யானைகளைத் தேட வேண்டும். அவை ஊரை அடையாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்,” என்று சொன்னார். அவர் பாலனுக்கு ஒரு தடியைக் கொடுத்தார்.

பாலனும் ஊர்மக்களும் நீண்ட நேரமாக நடந்தார்கள். அவர்களுக்குக் களைப்பும் தாகமும் ஏற்பட்டன. அவர்கள் பல விலங்குகளைப் பார்த்தார்கள்; ஆனால், யானைகளைக் காணவில்லை. “ஒரு வேளை யானைக் கூட்டம் இந்தப் பக்கம் வராது. நாங்கள் வீட்டுக்குப் போகலாம்,” என்று பாலன் கூறினான்.

ஆனால், ஊர்மக்கள் அதை மறுத்துத் தொடர்ந்து நடந்தார்கள். சிறிது நேரத்துக்குப் பிறகு பாலன் ஓர் உயரமான மரத்தைப் பார்த்தான். “காத்திருங்கள்!” என்று அவன் கத்தினான். “நான் மரத்தின்மீது ஏறுவேன். யானைக் கூட்டம் வருகிறதா என்று என்னால் பார்க்க முடியும்,” என்று சொன்னான்.

மரத்தின்மீது ஏறியதும் அவன் யானைக் கூட்டம் ஒன்றைப் பார்த்தான்.

“யானைக்கூட்டம் நம் ஊரை நோக்கிச் செல்கிறது!’’ என்று பாலன் அச்சத்துடன் கத்தினான்.

யானைகளைத் துரத்த ஊர்மக்கள் தங்கள் பறைகளை மறுபடியும் அடித்தார்கள். அந்த ஒலியைக் கேட்டவுடன் யானைகள் தங்கள் தும்பிக்கைகளைத் தூக்கிப் பெரிய சத்தம் செய்தன. அவை சத்தத்தைத் நிறுத்தாமல் ஊரை நோக்கிச் சென்றன.

அப்போது, அந்தச் சத்தத்தைக் கேட்ட ஒரு யானைக்குட்டி பயந்தது. அது பாலன் ஏறிய மரத்தை நோக்கி ஓடியது.

பாலனுடைய அப்பா, “கவனமாக இரு பாலா! அது உன்னைத் தாக்கலாம்,” என்று கத்தினார்.

யானை தன் பக்கத்தில் நெருங்கி வந்தபோது தான் என்ன செய்யலாம் என்று பாலன் யோசித்தான். அவன் சட்டைப் பையில் ஓர் ஊதல் இருந்தது என்று அப்போது அவனுக்கு ஞாபகம் வந்தது. அவன் அதை எடுத்துத் தன்னால் முடிந்த அளவிற்கு மிக உரக்கமாக ஊதினான்.

நல்ல வேளை அந்த யானைக்குட்டி நின்றது. அது யானைக் கூட்டத்துக்குத் திரும்பிப் போனது. யானையின் தாய் யானைக்குட்டி வருவதைப் பார்த்தது. யானையின் தாய் பாலனை நன்றியுடன் பார்த்தது. ஏனென்றால் பாலன் சிறிய யானையைக் காயப்படுத்தவில்லை. யானைகள் மெதுவாகத் திரும்பிச் சென்றன.

பாலன் பத்திரமாக இருக்கிறானா என்று பார்ப்பதற்கு ஊர்மக்கள் மரத்தை நோக்கி ஓடி வந்தார்கள். பாலன் மெதுவாக மரத்தின் கீழே இறங்கினான். “பாலா!... பாலா!... எங்கள் தலைவா!...” என்று அவர்கள் பாடிக்கொண்டே பாலனைத் தூக்கி ஊரை நோக்கித் திரும்பி வந்தார்கள்.

**கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுது.**

க. பாலன் ஏன் காட்டுக்குப் போனான்?

..............................................................................

.............................................................................. [1]

Marks

உ. பறை ஒலிகளைக் கேட்டபோது பாலன் என்ன நினைத்தான்?

.......................................................................................

....................................................................................... [1]

ஊ. ஊர்மக்களுக்கு எந்தச் சிக்கல் ஏற்பட்டது?

.......................................................................................

....................................................................................... [1]

ச. பாலனுடைய அப்பா அவனுக்கு ஏன் ஒரு தடியைக் கொடுத்தார் என்று நினைக்கிறீர்கள்?

.......................................................................................

....................................................................................... [1]

ரு. ஊர்மக்களுக்கு ஏன் களைப்பும் தாகமும் ஏற்பட்டன?

.......................................................................................

....................................................................................... [1]

சூ. 'அவர்கள் பல விலங்குகளைப் பார்த்தார்கள். ஆனால் யானைகளைக் காணவில்லை.' அந்த நேரத்தில் பாலன் என்ன நினைத்தான்?

.......................................................................................

....................................................................................... [1]

எ. பாலன் ஏன் ஓர் உயரமான மரத்தின்மீது ஏறினான்?

.......................................................................................

....................................................................................... [1]

அ. ஊர்மக்கள் ஏன் பறைகளை மறுபடியும் அடித்தார்கள்?

.......................................................................................

....................................................................................... [1]

Marks

௯. யானைக்குட்டி பாலன் ஏறிய மரத்தை நோக்கிச் சென்றபோது பாலனுடைய அப்பா ஏன் கவலைப்பட்டார்?

………………………………………………………………………………

……………………………………………………………………………… [1]

௧0. பாலன் யானையை எப்படி நிறுத்தினான்?

………………………………………………………………………………

……………………………………………………………………………… [1]

௧௧. யானைக்குட்டியின் தாய் பாலனை ஏன் நன்றியுடன் பார்த்தது?

………………………………………………………………………………

……………………………………………………………………………… [1]

௧௨. கடைசியில் ஊர்மக்கள் ஏன் பாலனை ‘எங்கள் தலைவா!’ என்று அழைத்தார்கள்?

………………………………………………………………………………

……………………………………………………………………………… [1]

௧௩. கீழ்க்காணும் மூன்று சொற்களுக்குப் பொருள் தருக. [3]

அ. அலறினான் - ……………………………

ஆ. யானைக்கூட்டம் - ……………………………

இ. அச்சத்துடன் - ……………………………

Marks

## Question 9A (5 marks)

**அ. கீழ்வரும் சொற்களைத் தமிழில் மொழிபெயர்க்க.**

1. watch - ……………………………..
2. library - ……………………………..
3. to dance - ……………………………..
4. delicious - ……………………………..
5. sometimes - ……………………………..

## Question 9B (5 marks)

**ஆ. கீழ்வரும் பத்தியைத் தமிழில் மொழிபெயர்க்க.**

One day Kavi went fishing. He found a nice place close to the sea. He started fishing. After a while, he caught a big fish. He went home happily.

## Question 10 (15 marks)

**ஏதாவது ஒரு தலைப்பைத் தேர்ந்தெடுத்து 150 சொற்கள் அளவில் ஒரு கட்டுரை எழுது.**

அ. உன் பள்ளியில் நடைபெற்ற ஒரு சிறப்பு நிகழ்ச்சியை **வருணித்து** எழுது. (பரிசளிப்பு விழா **அல்லது** இசை நாள் விழா முதலிய நிகழ்ச்சிகளைப் பற்றி எழுதலாம்).

- நீங்கள் என்ன பார்த்தீர்கள்?
- நீங்கள் என்ன கேட்டீர்கள்?
- நிகழ்ச்சியில் யார் யார் கலந்துகொண்டார்கள்?
- அந்தச் சூழல் எப்படி இருந்தது?

**அல்லது**

ஆ. "அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். ஆனால், எதுவுமே சொல்லவில்லை…………." - இச்சொற்றொடர்களை ஒரு கதையில் சேர்த்து எழுது.

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

…………………………………………………………………………………

Marks

**BLANK PAGE**



Please turn over this page

**BLANK PAGE**

**BLANK PAGE**



Please turn over this page

**BLANK PAGE**